


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 001 | 4 Pages | 01.08.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 001 | 4 பக்கங்கள் | 01.08.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு**

**விளக்கம்:**
**ஒழுக்கத்தில் நிலைத்துநின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.**

# என்னது.. 1¼ கிலோ மீன் விலை ரூ.15 ஆயிரமா: அப்படி என்னதான் இருக்கு?



புதுச்சேரி, ஆக. 1

புதுச்சேரியில் இருந்து விசைப்படகில் கடலில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர் வலையில் சிக்கிய 1¼ கிலோ எடையுள்ள ஆந்திரா மக்களால் மீன்களின் ராஜா என்று அழைக்கப்படும் புலாசா மீன் ஒன்று ரூ.15 ஆயிரத்திற்கு ஏலம் போனது.

புதுச்சேரியில் இருந்து விசைப்படகில் கடலில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர் வலையில் 1¼ கிலோ எடையில் அரிய வகை மீன் ஒன்று சிக்கியது. புலாசா என்ற பெயர் கொண்ட அந்த மீனை கரைக்கு கொண்டு வந்ததும், பெண் ஒருவர் ரூ.15 ஆயிரத்திற்கு ஏலம் எடுத்தார்.

பொதுவாக, 100 கிலோ எடை கொண்ட ராட்சத மீனை இவ்வாறு அதிக தொகை கொடுத்து வாங்குவதை பார்த்திருக்கிறோம். அதுவும் 1¼ கிலோ எடை கொண்ட புலாசா மீனை இவ்வளவு விலை கொடுத்து வாங்க என்னதான் காரணம் என்று விவரத்தை தேடினோம்.

ஆந்திர மக்களால் மீன்களின் ராஜா என புலாசா மீன் அழைக்கப்படுகிறது. அதிக சுவையும், அதிக சத்தும் கொண்ட இந்த மீன், எப்போதாவதுதான் வலையில் சிக்குமாம். எப்போதெல்லாம் இந்த மீன் பிடிபடுகிறதோ, அப்போதெல்லாம் அதன் எடையை பொருத்து ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விலை போகுமாம்.

# நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் காந்தி உள்ளிட்ட எம்.பிக்கள் நூதன போராட்டம்



புதுடெல்லி, ஆக. 1

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நாளில் இருந்தே அனல் பறந்து வருகிறது. நீட் வினாத்தாள் கசிவு விவகாரம், நீட் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று தர்மேந்திர பிரதான் ராஜினமா செய்ய வலியுறுத்தி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் நடத்திய போரட்டத்தில் பாதுகப்பு படையினர்தாக்குதல் நடத்திய விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. மக்களவை கூடியதும் அமளி தொடர்ந்ததால், நண்பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்பிக்கள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு பிரச்சினையை கவனத்திற்கு கொண்டு வரும் விதமாக, ராகுல் காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் உண்டியல்களில் பணம் போட்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர். ராமர் கோவில் நன்கொடை முறைகேடு தொடர்பாக கையில் பேனர்களையும் கையில் வைத்து இருந்தனர்.

# வயநாடு நிலச்சரிவு 2 ஆண்டுகள் நிறைவு; கல்லறையில் உறவினர்கள், மக்கள் அஞ்சலி

வயநாடு, ஆக. 1

335 பேரை பலி வாங்கிய வயநாடு நிலச்சரிவு நிகழ்ந்து 2 ஆண்டுகள் ஆனது. இதை நினைவுகூறும் வகையில் உறவினர்கள், மக்கள் கல்லறையில் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

கேரளம் மாநிலம் வயநாடு மாவட்டம் சூரல்மலை, முண்டக்கை, புதுமலை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2024ம் ஆண்டு ஜூலை மாதம் 30ந் தேதி பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் ஆறுகளில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்துஓடியது.இரவில்வீடுகளில்தூங்கிகொண்டிருந்தஏராளமானோர் அடித்து செல்லப்பட்டனர். பாறைகள், கற்கள் உருண்டு வந்து. கிராமங்கள் இருந்த இடமே தெரியாமல் போனது.

நிலச்சரிவின்கோரதாண்டவத்தில்298பேர்உயிரிழந்தனர்.410குடும்பத்தினர் பாதிக்கப்பட்டனர். 37 பேரை காணவில்லை. இதுவரை அவர்களுடைய உடல்களை கண்டறிய முடியவில்லை. எனவே, அவர்களை இறந்தவர்களாக கேரளம் அரசு அறிவித்தது. இதன் மூலம் மொத்தம் 335 பேர் உயிரிழந்தனர். நிலச்சரிவில் உயிர் பிழைத்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரசு மூலம் முதல் கட்டமாக 178 பேருக்கு புதிய வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டது. 2வது கட்டமாக 157 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலச்சரிவு நிகழ்ந்து நேற்றுடன் 2 ஆண்டுகள் ஆனது. இதை நினைவு கூறும் வகையில் சூரல்மலை. முண்டக்கை பகுதிகளில், நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் உறவினர்கள் மற்றும் மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். கல்லறைகள் மீது மலர்கள் தூவினர். அப்போது பரவலாக மழை பெய்தது. கொட்டும் மழையிலும் அவர்கள் அஞ்சலி செலுத்தியதை காண முடிந்தது.

தாயை பிரிந்த மகன், பிள்ளைகளை இழந்த தாய், தந்தையை இழந்த குடும்பம், உறவினர்களை இழந்தவர்கள், மாணவர்களை இழந்த பள்ளி ஆசிரியர்கள், கணவரை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவர் என பலர் நீங்காத நினைவுகளுடன் மவுனமாக நின்றிருந்தனர். மேலும் வருவாய்த்துறை மந்திரி அனில் குமார். விவசாயத்துறை மந்திரி சித்திக் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கல்லறைகளில் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். அதோடு அங்கு நடந்த சர்வ மத பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

# தலைமைச் செயலகத்துக்கு பட்டு வேட்டி சட்டையில் வந்த முதல்வர் ஜோசப் விஜய்





சென்னை, ஆக. 1

தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய், கடந்த மே மாதம் 10ந் தேதி பதவியேற்றுக் கொண்டார். அதன்பின்னர், ஒவ்வொரு நாளும் அரசு அலுவலர்கள் பணிக்கு வருவதுபோல், காலையிலேயே தலைமைச் செயலகம் வந்து மாலை வரை பணியாற்றி வருகிறார். மதிய உணவையும் தன்னுடன் எடுத்துவந்து சாப்பிடுகிறார்.

இதுவரை இருந்த முதல்அமைச்சர்கள் எல்லாம் வெள்ளைநிற வேட்டி சட்டையில் தலைமைச்செயலகம் வந்து சென்றுள்ளனர். ஆனால், இவர் திரைத்துறையில்இருந்துவந்ததாலோ என்னவோ, ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வகையான ஆடைகள் அணிந்து வருகிறார்.

குறிப்பாக, கோட்சூட்டுடன் வரும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய், வெள்ளிக்கிழமைகளில் பட்டு வேட்டிசட்டையில் வருவதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார். அந்த வகையில், இன்று தலைமைச் செயலகம் வந்த அவர் பட்டு வேட்டி சட்டையிலேயே வந்திருந்தார். அவரைபல்வேறுமுக்கியபிரமுகர்கள் சந்தித்து பேசினார்கள்.

# வீரபாண்டி வஞ்சி நகர் அடுக்குமாடி குடியிருப்பில் கண்காணிப்பு கேமரா அமைப்பு – பொதுமக்கள் நலன் கருதி முக்கிய ஆலோசனை கூட்டம்



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள வீரபாண்டி வஞ்சி நகர் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு கண்காணிப்பு கேமரா அமைக்கும் நிகழ்ச்சி மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 9 முதல் 18 வரை உள்ள சங்க நிர்வாகிகள், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், வீரபாண்டி காவல் ஆய்வாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய அதிகாரிகள் மற்றும் சங்க நிர்வாகிகள், குடியிருப்பின் பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் விரைவில் செயல்படுத்தப்படும் என உறுதியளித்தனர்.

மேலும், பொதுமக்களின் தேவைகளை முன்னிறுத்தி செயல்பட்டு வரும் சங்க நிர்வாகிகளை வாரிய அதிகாரிகள், காவல்துறைஅதிகாரிகள்மற்றும்குடியிருப்புவாசிகள்பாராட்டி, வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**4ம் ஆண்டு அடியெடுத்து வைக்கும் தினக்கனி காலை நாளிதழுக்கு நிருபர்கள், வாசகர்கள், புகைப்பட கலைஞர்கள் அனைவரின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்...**

# சென்னை தலைமைச் செயலகத்தில் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்திப்பு



சென்னை தலைமைச் செயலகத்தில் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் பேசியதாவது..

மின் கட்டண உயர்வு சம்பந்தமாக 3.70 லட்சம் புகார்கள் வந்துள்ளதாக திமுக தலைவர் மு.க ஸ்டாலின் தகவல் தெரிவித்துள்ளார். அவர் வாட்ஸ்"அப்பில் வந்த தவறான தகவலை நம்பி இவ்வாறு கூறியுள்ளார். சமூக வலைதளங்களில் மின் கட்டணம் உயர்ந்துள்ளதாக தகவல்கள் வந்தன. இதன் அடிப்படையில் ரொட்டீன் செக்கப் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டும் இதேபோன்று இரண்டு முதல் மூன்று மடங்கு மின் கட்டணம் உயர்வாக வந்துள்ளது. அதன்படி கடந்த ஆண்டு 11 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மூன்று மடங்கு மின் கட்டணம் உயர்வாக வந்தது.

இந்த ஆண்டு 9 லட்சத்து 60 ஆயிரம் பேருக்கு மட்டுமே 2 முதல் 3மடங்கு மின் கட்டணம் அதிகமாக வந்துள்ளது. கடந்தாண்டு ஒப்பிடுகையில் இது குறைவு. இதுகுறித்து புகார்கள் எதுவும் வரவில்லை. மின்கட்டணத்தில் மாறுபாடுகள் உள்ள 3 லட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகளில் மறுமதிப்பீடு (Reassesmemt) நடைபெற்று வருகிறது. மக்களை குழப்பும் விதமாக மு.க ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். வாட்ஸ்'அப்பில் வரும் தகவலை வைத்து ஸ்டாலின் மக்களை குழப்ப வேண்டாம். மின்கட்டணத்தில் மாறுபாடுகள் உள்ள 3 லட்சத்து 50 மின் இணைப்புகளில் மறுமதிப்பீடு (Reassesmemt) நடைபெற்று வருகிறது. ஒரு வார காலத்திற்குள் மறு மதிப்பீட்டு பணிகள் நிறைவடையும்.

மேகதாது விஷயத்தில் நாம் தெளிவாக உள்ளோம். மேகதாத விவகாரம் குறித்து தேவையில்லாமல் அதிமுக வழக்கு தொடர்ந்துள்ளது. சட்டப்பேரவையில் அதிமுகவின் முன்னிலையில்தான் மேகதாது விவகாரம் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேவையில்லாமல் மக்களை குழப்பம் விதமாக தமிழக மக்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அதிமுக வழக்கு தொடர்ந்து உள்ளது.

மேகதாது விவகாரம் இரண்டு மாநில சம்பந்தப்பட்ட பிரச்சனை. ஒன்றிய அரசுதான் இதற்கு தீர்வு கொடுக்க முடியும். அது தவிர்த்து சுமூகமான முறையில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கையில் முதல்வர் ஆலோசித்து வருகிறார். முடிவுகள் விரைவாக எடுக்கப்படும். உச்சநீதிமன்றம் மூலமாக தமிழ்நாட்டுக்கு தேவையான நீரைபெறவேண்டும்.அதற்கானமுயற்சிகள் நடைபெற்று வருகிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஒன்றிய அமைச்சரே தவறாக தமிழக மக்களுக்கு எதிராக பேசிக் கொண்டு வருகிறார். மாநிலங்களுக்கு நதிநீர் பங்கீடு குறித்து எதுவும் புரியாமல் ஒன்றிய அமைச்சர் பேசி வருகிறார். அதைக் கூட கண்டிக்க இங்கே யாருக்கும் உரிமை இல்லை. எதிர்க்கட்சியை சார்ந்தவர்கள் இதை கண்டிக்கவில்லை. விரைவில் இது குறித்து முதல்வர் நல்ல முடிவு எடுப்பார்.

காவிரி விவகாரத்தை வைத்துத்தான் கர்நாடக அரசு அரசியல் செய்து வருகிறது. 100 ஆண்டுகளாக கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொடுக்க மாட்டோம் என்ற அரசியலைத்தான் செய்து வருகிறார்கள். இதைஅரிசிலாகபார்க்காமல் தமிழக விவசாயிகளின் நலன் சம்பந்தமாக பார்க்க வேண்டும் அதுதான் எங்கள் எண்ணம். காவேரி நதிநீர் பங்கீடு குறித்து ஒரு சில முடிவுகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் அறிவிப்புகள் வெளியிடப்படும்.

காவிரி நீரை பெறுவதற்கு உச்சநீதிமன்றத்தை நாடுவது, காவிரி நடுவர் மன்றம் அமைப்பது, மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தையின் மூலம் காவிரி நதிநீரை பெறுவது, ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது இந்த நான்கு வழிகளை பயன்படுத்தி காவிரி நீரை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை முதல்வர் செய்வார்.

காவிரி நதிநீர் விவகாரம் குறித்து பேசுவதற்கு முதல்வர் கர்நாடகா செல்வது தொடர்பான எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை. மின் கட்டணம் உயர்வு குறித்து மறுமதிப்பீடு நடைபெற்று வருகிறது. வரும் நாட்களில் என்ன சிக்கல் உள்ளது என்பதை வெளியிடுவோம்.



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட எழிலூர் ஊராட்சியிலுள்ள எழிலூர் ஏரியில் தூர்வாரும் பணி நடைபெற்றுவருவதை திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

# கோவை: பாரதியார் பல்கலைக்கழகத்தின் வனப்பகுதியில் ஊழியர் சடலமாக மீட்பு

கோவை ஆக. 1

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் பின்புறம் உள்ள வனப்பகுதியில், பல்கலைக்கழக ஊழியர் ஒருவர் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி பகுதியைச் சேர்ந்தவர் சசிகுமார் (வயது 33). இவர் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தற்காலிக ஊழியராக பணியாற்றி வந்தார். இந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) அன்று இவர் பல்கலைக்கழக வளாகத்தின் பின்புறம் உள்ள ஒதுக்குப்புறமான வனப்பகுதியில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

அந்த வழியாக தேன் எடுக்கச் சென்றவர்கள் இதைப் பார்த்து உடனடியாக போலீசாருக்குத் தகவல் கொடுத்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வடவள்ளி காவல் நிலைய போலீசார் மற்றும் தடயவியல் நிபுணர்கள் விரைந்து வந்தனர். பின்னர் சசிகுமாரின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்திலுள்ள ஆதாரங்களை திரட்டினர். மேலும் இந்த கொலைக்கான



காரணம் முன்விரோதமா அல்லது வேறு ஏதேனும் காரணமா என சசிகுமாரின் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் இவரின் உடலில் காயங்கள் இருந்ததால் இது கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் வடவள்ளி போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மின்கட்டணம் உயர்வா? மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 1



மின்கட்டணம் குறித்த மு.க.ஸ்டாலினின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

வாட்ஸ்அப்பில் வந்த ஏதோவொரு தவறான தகவலைத்தான் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்லியிருக்கிறார். பலருக்கும் மின் கட்டணம் அதிகம் வந்திருப்பதாக பலரும் சமூக ஊடகங்களில் கூறி வருகின்றனர். இது தொடர்பாக ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டுடன் இந்தாண்டு ஒப்பிடுகையில், கடந்தாண்டில் இதே காலகட்டத்தில் (கோடை) 11.50 லட்சம் பேருக்கு 3 மடங்கு அளவில் மின் கட்டணம் வந்தது. ஆனால், இந்தாண்டில் 9.60 லட்சம் பேருக்குத்தான் அதிகரித்துள்ளது. கடந்தாண்டைவிட இந்தாண்டில் 2 லட்சம் பேர் குறைந்துள்ளனர்.

மக்களைக் குழப்புவதற்காகவே மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் கூறியதுபோல 3.70 லட்சம் புகார்களெல்லாம் வரவில்லை. மின் கட்டணம் உயர்வு எனவதந்தி பரவுகிறது. வெயில்காலத்தில்அதிகளவு ஏசி பயன்படுத்துவதால் கட்டணம் உயர்கிறது. மின் பயன்பாடு அதிகரிக்கும்போது மின் கட்டணம் அதிகரித்து வரத்தான் செய்யும்.

மேகதாது பிரச்சினை இரு மாநிலம் விவகாரம் என்பதால் முதல்அமைச்சர் விஜய் அனைத்து தரப்பு ஆலோசனைகளையும் கேட்கிறார். மேகதாது விவகாரத்தில் நேற்று அதிமுக தரப்பில் தேவையின்றி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தேவையின்றி மக்களை குழப்பும் வகையில் பேரவையில் நிறைவேற்றியதீர்மானத்தை எதிர்த்து அதிமுக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

ஆணையத்தில் இருந்து நீர் திறக்க வேண்டும் என்று உத்தரவு கொடுத்த பின்னரும் கர்நாடகா தண்ணீர் திறக்க மறுக்கிறது. மேகதாது விவகாரத்தில் சட்டநடவடிக்கை தொடர்பாக ஒரு சில நாட்களில் அறிவிப்பு வரும். முதல்அமைச்சர் விஜய் கர்நாடகா செல்வாரா?, இல்லையா? என்பது குறித்தும் விரைவில் அறிவிப்பு வெளியாகும். தமிழகத்தில் நீர் திறக்க மறுப்பதையே 40 ஆண்டு கால அரசியலாக கர்நாடகா வைத்துள்ளது.

மேகதாது விவகாரத்தில் முதல்அமைச்சர் ஆலோசனை செய்து வருகிறார்; இந்த பிரச்சினையில் தெளிவாக உள்ளோம்; தமிழக மக்களுக்கு எதிராக செய்ய வேண்டும் என்பதற்காக மத்திய அரசு இப்படி செய்கிறதா என தெரியவில்லை?. மேகதாது விவகாரத்தில் முதல்அமைச்சர் தரப்பிலிருந்து ஒரு வாரத்துக்குள் தேவையான முடிவுகள் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடகதமிழக அரசின் முதல்அமைச்சர்கள் நேரில் சந்திப்பதில் எந்தவித பயனுமில்லை டிடிவி தினகரன்

சென்னை, ஆக. 1



தமிழக விவசாய சங்கங்கள் இந்த சந்திப்பு அவசியமற்றது என தெரிவித்துள்ள நிலையில் முதல் அமைச்சர் விஜய் மேற்கொள்ளவுள்ள இந்த சந்திப்பு சம்பிரதாயமா? அல்லது சந்தர்ப்பவாதமா? என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பி உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

டெல்லியில் நேற்று நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் காவிரி ஒழுங்காற்றுக் குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 3500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி கடந்த ஜூன் மாதத்திற்கு 9.19 டி.எம்.சி.தண்ணீருக்கு 2.91 டி.எம்.சி.தண்ணீரைமட்டுமே தந்த கர்நாடக அரசு, ஜூலை மாதத்திற்கான 31.24 டி.எம்.சி. தண்ணீரில் 10 சதவீதத்தைக் கூட வழங்காமல் தமிழகத்தையும், தமிழக விவசாயிகளையும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

தமிழகத்திற்கான தண்ணீரை வழங்க முடியாது என நேற்றும் கர்நாடக மாநில முதல்மந்திரி டி.கே. சிவக்குமார் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கும் நிலையில், காவிரி நதிநீர் மற்றும் மேகதாது அணை தொடர்பாக விவாதிக்க தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் கர்நாடகாவுக்குச் செல்வதால் எந்த பயனும் ஏற்படப்போவதில்லைஎன்றுதமிழகவிவசாயசங்கங்களும் தெரிவித்துள்ளனர்.

உரிய நேரத்தில் உச்சநீதிமன்றமும், காவிரி மேலாண்மை ஆணையமும் தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்த பின்னரும் தமிழகத்திற்கான உரிய நீரை உரிய நேரத்தில் பெற முடியாத முதல்அமைச்சர் ஜோசப் விஜய், கர்நாடகா சென்று அம்மாநில முதல் மந்திரியிடம் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது "கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போனானாம்" என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி நாளை தமிழகம் வர உள்ள நிலையில், தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் ராகுல் காந்தியை சந்தித்து, காங்கிரஸ் ஆட்சி செய்யும் கர்நாடக அரசு மேகதாது அணைத் திட்டத்தைக் கைவிடுவதற்கு அரசியல் ரீதியாக உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும்.


மேகதாது அணை விவகாரத்தில் காங்கிரஸ் மேலிடம் கர்நாடக அரசுக்கு தேவையான அழுத்தத்தை வழங்க மறுக்கும் பட்சத்தில், தமிழக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் பங்கேற்பு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதை ராகுல் காந்தியிடம் நேரடியாக தெரிவிக்க தமிழக முதல் அமைச்சர் ஜோசப் விஜய்க்கு தைரியம் இருக்கிறதா?

எனவே, தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவு குறித்து விவாதிக்க கர்நாடக மாநிலத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் நிலையில், கர்நாடக அரசின் சட்டவிரோதப் போக்கை சட்டரீதியாக முறியடிக்கத் தேவையான நடவடிக்கைகள் குறித்து தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து விவாதிக்க வேண்டும் என முதல்அமைச்சர் ஜோசப் விஜய்யை மீண்டும் ஓர் முறை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடகா சென்று தண்ணீரை தூக்கிட்டு வரப்போறீங்களா? - விஜய் பயணத்திற்கு பெ. சண்முகம் கடும் எதிர்ப்பு

கன்னியாகுமரி, ஆக. 1



கன்னியாகுமரியில் நடைபெற்ற நிகழ்ச்சிஒன்றில்மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம் பேசியதாவது; தமிழக முதல் அமைச்சர் விஜய் வரும் ஆகஸ்ட் 3ம் தேதி கர்நாடகாவுக்கு சென்று காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்போது நான் என்ன கேட்க விரும்புகிறேன்.. கர்நாடகாவுக்கு சென்று நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்..? நீங்க அங்க போய் ஒண்ணும் நடக்கலைனா என்ன ஆகும் தெரியுமா? அங்கிருந்து தண்ணீரை நேராக தூக்கிட்டு வர போறீங்களா 3 ஆயிரத்து 500 டிஎம்சி தண்ணீரை திறந்து விட காவிரி மேலாண்மை ஆணையத்திடம் நேரடியாக கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.

போனால் தண்ணீரை வாங்கிட்டு வர முடியாது. மேகதாதுவில் அணை கட்ட வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கைகாவிரிக்கு நடுவே அணைக்கட்ட கூடாது என்பது ஏற்கனவே தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒரு விரிவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுமத்தியஅரசுக்குஅனுப்பப்பட்டுள்ளது .இதை நீங்கள் அங்கு சென்று நாங்கள் அணைகட்ட அனுமதிக்க மாட்டோம் என்று சொல்ல போறீங்களா? இத்தகைய சூழ்நிலையில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர்இப்பொழுது எதற்கு கர்நாடகாவிற்கு செல்ல வேண்டும் ?.அந்தப் பயணத்தை அவர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவேளை நீங்கள் அங்கு சென்று காவிரியின் நதிநீர் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது அவர்கள் தண்ணீரை திறந்து விட முடியாது என்று கூறினால் தமிழ்நாட்டு டெல்டா விவசாயிகளின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை முதலமைச்சர்விஜய் யோசிக்க வேண்டும் இது தேவையற்ற பயணம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அனுமதி கொடுக்க வேண்டும் என்கிற பிரச்சனை கிடையாது. டெல்டா மாவட்டம் பாலைவனமாக மாறிவிட்டது அங்கு தண்ணீர் கிடையாது" என்றார். காவிரி நீர் விவகாரம் தொடர்பாக கர்நாடகா முதல்வர்

டி.கே. சிவக்குமாரை சந்தித்து பேசுவதற்காக தமிழக முதல் அமைச்சர் விஜய் ஆகஸ்ட் 3ஆம் தேதி கர்நாடகா செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விஜய்யின் இந்த கர்நாடக பயணத்திற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. காவிரி விவகாரத்தில் தமிழக அரசு மேற்கொண்டு வரும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும், பேச்சுவார்த்தை மூலம் இந்த பிரச்சினையை அணுகுவது சரியான முடிவாக இருக்காது என்றும் எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன.

# திமுக ஆட்சியில் அறிமுகமான 'தாயுமானவர் திட்டம்' பெயர் மாற்றம்!

சென்னை, ஆக. 1

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, முந்தைய திமுக அரசின் நலத்திட்டங்களின் பெயர்களை தவெக அரசு மாற்றி வருவதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், தற்போது மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் 'முதல் அமைச்சரின் தாயுமானவர் திட்டம்' என்ற பெயரும் அரசு அறிவிப்புகளில் நீக்கப்பட்டிருக்கிறது.


திமுக ஆட்சிக் காலத்தில், 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மட்டுமே உள்ள குடும்பங்கள் ரேஷன் கடைகளுக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை பெற்றுச் செல்வதில் ஏற்படும் சிரமங்களைப் போக்குவதற்காக, அவர்களின் வீடுகளுக்கே சென்று பொருட்களை வழங்கும் வகையில் 'முதல்அமைச்சரின் தாயுமானவர் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதைய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்த இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வீடு தோறும் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்நிலையில், விஜய் தலைமையிலான தவெக அரசு பொறுப்பேற்ற பிறகு, புதிய நலத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக, முந்தைய அரசின் திட்டங்களின்பெயர்களைமாற்றிவருவதாகஎதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. அந்த வகையில், 'மகளிர் விடியல் பயணம்' என்ற திட்டம் 'மகளிர் பயணம்' என்றும், 'முதல்அமைச்சரின் காலை உணவுத் திட்டம்' 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' என்றும், 'நான் முதல்வன்' திட்டம் 'திறன் தமிழ்நாடு' என்றும் மாற்றப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் தற்போது 'முதல்அமைச்சரின் தாயுமானவர்திட்டம்' என்ற பெயரும்அரசுஅறிவிப்புகளில் இடம்பெறாமல் போயிருப்பது கவனத்தை ஈர்த்துள்ளது.

அதற்கு பதிலாக, "பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும்" என்ற பொதுவான குறிப்புடன் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீலகிரி மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு, ஆகஸ்ட் மாதத்திற்கான பொது விநியோகப் பொருட்கள் வயது முதிர்ந்தோர் மற்றும்



நாள்: 30.07.2026

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்
திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப. அவர்களின் செய்திக்குறிப்பு

ஆகஸ்ட் 2026 மாதத்திற்கு 04.08.2026 மற்றும் 05.08.2026 ஆகிய தேதிகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்கள் ஆகஸ்ட் 2026 மாதத்திற்கு 04.08.2026 மற்றும் 05.08.2026 ஆகிய நாட்களில் வழங்கப்படும். இத்திட்டத்தினை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.



மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே ஆகஸ்ட் 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் வழங்கப்படும் என்றும், தகுதியுள்ள பயனாளிகள் இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் பெயர் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் அரசு அறிவிப்புகளில் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால், முந்தைய அரசின் திட்டங்களின் அரசியல் அடையாளங்களை நீக்கும் நோக்கில்தான் இந்தப் பெயர் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற கேள்வி அரசியல்வட்டாரங்களில்எழுந்துள்ளது.அதேவேளையில், திட்டத்தின் சேவை தொடர்ந்து செயல்படுவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, நீலகிரி மாவட்ட நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியிருப்பதாவது;

ஆகஸ்ட் 2026 மாதத்திற்கு 04.08.2026 மற்றும் 05.08.2026 தேதிகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத் திட்டப்பொருட்கள்ஆகஸ்ட்2026மாதத்திற்கு04.08.2026 மற்றும் 05.08.2026 ஆகிய நாட்களில் வழங்கப்படும். இத்திட்டத்தினை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.. இல்லையெனில்..?" எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட பரபரப்பு அறிக்கை

சென்னை, ஆக. 1

2026 தேர்தல் வாக்குறுதியின்படி பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யவும், காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும், த.வெ.க. காங்கிரஸ் கூட்டணி அரசின் முதல்அமைச்சரை வலியுறுத்துவதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

த.வெ.க. ஆட்சிக்கு வந்தால் 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ள விவசாயிகளுக்கு முழுமையான கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி; 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி என்று அறிவித்தது.

ஆட்சிக்கு வந்தபின் ரூ. 75,000/ம் வரை குறு, சிறு விவசாயிகள் பயிர்க் கடன் பெற்றிருந்தால் அவை முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும்; ரூ. 75,000/க்கு மேல் கடன் பெற்றவர்களுக்கு ரூ. 35,000/ மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்றும் சரித்திரத்திலேயே இல்லாத ஒரு நாடகத்தை இந்த அரசு அரங்கேற்றி உள்ளது.

பொய்க்கால் குதிரை அரசின் இந்த பயிர்க் கடன் அறிவிப்பை எதிர்த்து தமிழகம் முழுவதும் விவசாயிகள் தொடர் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை முழுமையாக ரத்து செய்யக் கோரி, கழகத்தின் சார்பில் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

த.வெ.க. அரசு வேளாண் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் 6.8.2026 அன்று தாக்கல் செய்யும்போது, பயிர்க்கடன்தள்ளுபடி குறித்து2026தேர்தல்வாக்குறுதியில் அளித்தவாறு, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்க வேண்டும். இல்லையெனில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், த.வெ.க.கூட்டணி அரசை எதிர்த்து தமிழகமெங்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்.

காவிரி நீரை மாநிலங்களுக்கிடையே பங்கிடுவது பற்றி சுப்ரீம்கோர்ட்டு மிகத் தெளிவானதீர்ப்பை வழங்கியுள்ளது. அதன்படி கர்நாடக அரசு இந்த ஆண்டு ஜூன் மாதம் தமிழகத்திற்கு தரவேண்டிய 9.19 TMC தண்ணீருக்கு பதில் 2.91 TMC நீரை மட்டுமே திறந்துள்ளது. ஜூலை மாதம் வழங்கப்பட வேண்டிய தண்ணீர் 31.24 TMC நீர்.

ஆனால், கர்நாடக அரசு தமிழகத்திற்கு திறக்க வேண்டிய பங்கு நீரையும் இன்றுவரை முழுமையாகத் திறந்துவிடவில்லை. காவிரி நீர் ஒழுங்குமுறை குழு (CWRC) கூட்டத்தில் இதுகுறித்து முறையிடப்பட்டது.

அதன்படி, காவிரியிலிருந்து தமிழ் நாட்டிற்கு ஜூலை 29ம் தேதி முதல் 15 நாட்களுக்கு தினமும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு விநாடிக்கு 3,500 கன அடி வீதம் கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீரை திறந்துவிட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை நடைமுறைப்படுத்தவேண்டும்என்றுகாவிரிமேலாண்மை ஆணையமும் கர்நாடக காங்கிரஸ் அரசை அறிவுறுத்தியுள்ளது.

ஆனால், கர்நாடக முதல்மந்திரி அவர்கள் காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவை செயல்படுத்த மறுக்கிறார். மேலும், இதுகுறித்து கர்நாடகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படும் என்று கர்நாடக முதல்மந்திரி அறிவித்துள்ளார். தமிழக முதல்அமைச்சர் பேச்சுவார்த்தைக்கு பெங்களூரு



வரும்பொழுது அவரை ஹெலிகாப்டரில் அழைத்துச் சென்று கர்நாடக அணைகளைப் பார்வையிட வைப்பேன் என்றும் கூறியுள்ளார்.

இதுபோன்ற நிலையில், மேகதாதுவில் காவிரியின் குறுக்கேஅணைகட்டினால்தமிழகத்திற்குகாவிரியிலிருந்து ஒரு சொட்டு தண்ணீர்கூட கிடைக்காது. குடிநீருக்காக காவிரியை நம்பியுள்ள சுமார் 20 மாவட்டங்களில் கடும் குடிநீர் பிரச்சனை ஏற்படுவதுடன், டெல்டா மாவட்டங்களும் பாலைவனமாக மாறும் சூழ்நிலை ஏற்படும்.

த.வெ.க.காங்கிரஸ் கூட்டணி அரசின் முதல்அமைச்சர் பேச்சுவார்த்தைக்காக பெங்களூரு செல்வதாகச் செய்திகள் வெளிவந்தவுடன், அனைத்துக்கட்சிக்கூட்டத்தைக்கூட்டி, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்றும், அதன் அடிப்படையில் சட்ட வல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்றும் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொய்க்கால் குதிரைஅரசின்முதல்அமைச்சரைவலியுறுத்தி ஏற்கெனவே நான் அறிக்கை வெளியிட்டிருந்தேன்.

ஏற்கெனவே, சுப்ரீம்கோர்ட்டின் இறுதித் தீர்ப்பின்படி கர்நாடகா ஒவ்வொரு ஆண்டும் 177.25 TMC தண்ணீர் தமிழகத்திற்கு திறந்துவிட வேண்டும்; மாத வாரியாக எவ்வளவு திறக்க வேண்டும் என்ற அளவீடும் உள்ளது. சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பு தெளிவாக உள்ளதால், பேச்சுவார்த்தைக்காக தமிழக முதல்அமைச்சர் பெங்களூரு செல்வதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்; அனைத்துக் கட்சிக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் என்று இந்த அரசை மீண்டும் வலியுறுத்தினேன். தமிழகத்திலுள்ள பெரும்பாலான கட்சித் தலைவர்களும், விவசாய சங்கப் பிரதிநிதிகளும் இதே கருத்தை தெரிவித்துள்ளனர்.

த.வெ.க.காங்கிரஸ் கூட்டணி அரசின் முதல்அமைச்சர் இன்றுவரை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடாததோடு, மேகதாது குறித்து மத்திய இணை அமைச்சர் அளித்த பதிலைப் பற்றியும், காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவின்படி தண்ணீர் திறக்கமாட்டேன் என்று கூறிய கர்நாடக முதல் மந்திரியின் கருத்து பற்றியும், எதுவும் பேசாமல் வாய்மூடி மவுனியாக இருப்பதற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, தமிழக விவசாயிகளின் ஜீவ நதியாம் காவிரி நதி மற்றும் மேகதாது பிரச்சனைகள் பற்றி விவாதிக்க, உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. பெண் கவுன்சிலர் விஷம் குடித்து தற்கொலை

தென்காசி, ஆக. 1



தென்காசி நகராட்சி 23வது வார்டு பா.ஜ.க. பெண் கவுன்சிலர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

தென்காசி பகுதியைச் சேர்ந்தவர் முத்து கோபாலகிருஷ்ணன். இவரும் சென்னையில் உள்ள அனாதை ஆசிரமத்தில் வளர்ந்ததாக கூறப்படும் சுனிதா (வயது 45) என்பவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். சுனிதா தென்காசி நகராட்சி 23வது வார்டு பா.ஜ.க. கவுன்சிலராக இருந்து வந்தார். கடந்த 2 நாட்களுக்கு முன் தென்காசியில் உள்ள ஒரு தியேட்டரில் படம் பார்க்க சென்றபோது சுனிதாவுக்கும், அவரது மூத்த மகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சுனிதாவை, முத்து கோபாலகிருஷ்ணன் கண்டித்ததாக கூறப்படுகிறது. இதனால் விரக்தியில் இருந்த சுனிதா நேற்று முன்தினம் தனது வீட்டின் மாடியில் வைத்து வயலுக்கு தெளிக்கும் களைக் கொல்லி மருந்தை (விஷம்) குடித்து தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து போலீ சார் விசாரித்து வருகின்றனர்.

# காவிரி விவகாரத்தில் முதல்அமைச்சர் விஜய் கர்நாடகம் செல்லக் கூடாது; அன்புமணி



சென்னை, ஆக. 1

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் கருகும் குறுவை பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் வினாடிக்கு 3500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடும்படி காவிரி மேலாண்மை ஆணையம் ஆணையிட்ட பிறகும் கூட தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க கர்நாடக காங்கிரஸ் அரசு மறுக்கிறது; அங்குள்ள மக்களைத் தூண்டி விட்டு தமிழ்நாட்டுக்கு எதிராக போராட வைக்கிறது. இவ்வளவுக்குப்பிறகும்கர்நாடகத்துக்குசென்றுஅம்மாநில முதல்மந்திரி டி.கே.சிவக்குமாருடன் பேச்சு நடத்தியே தீருவேன் என்று முதல்அமைச்சர் விஜய் பிடிவாதம் பிடிப்பது தமிழகத்தின் நலனுக்கு எந்த வகையிலும் பயனளிக்காது.

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்ற மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை ஏற்க முடியாது என்று கூறிவிட்ட கர்நாடக அரசு, அத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய தீர்மானித்திருக்கிறது. காவிரி ஆணையத்தின் உத்தரவுப்படி தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்கக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்துள்ள கன்னட அமைப்புகள் காவிரி பாயும் மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்போவதாக எச்சரித்திருக்கின்றன. கர்நாடக முதல்மந்திரி டி.கே. சிவக்குமாரும் இந்த பிரச்சினைகுறித்து விவாதிக்க ஆகஸ்ட் 2ஆம் தேதி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டியிருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்கக் கூடாது என்பதற்காகத் தான் கர்நாடக அரசும், கன்னட இயக்கங்களும் இத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளன. தமிழ்நாட்டுக்கு ஒரு சொட்டு தண்ணீரைக் கூட தரக் கூடாது என்ற மனநிலையில் கர்நாடகம் இருக்கும் போது அங்கு சென்று பேச்சு நடத்தி முதல்அமைச்சர் விஜய் எதை சாதிக்கப் போகிறார்? அவரது பயணத்தின் மூலம் தமிழ்நாட்டுக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது. மாறாக மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமைகள் தான் தாரைவார்க்கப்படும். இந்த தவறை முதல் அமைச்சர் விஜய் செய்யக் கூடாது.

தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 3500 கன அடி வீதம் 15 நாள்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று தான் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் அடுத்த 15 நாள்களில் வெறும் 4.5 டிஎம்சி நீர் மட்டும் தான் தமிழகத்திற்கு கிடைக்கும். இது ஜூன், ஜூலை மாதங்களில் தமிழ்நாட்டுக்கு கர்நாடகம் வழங்க வேண்டிய நீரில் பத்தில் ஒரு பங்கு தான். ஆனால், அந்த அளவுக்கு குறைந்த நீரைத் திறப்பதற்குக் கூட கர்நாடகம் தயாராக இல்லை.

கர்நாடகத்தில் காவிரி மற்றும் துணை ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 4 அணைகளில் இன்று காலை நிலவரப்படி மொத்தம் 67.078 டி.எம்.சி தண்ணீர் உள்ளது. அதுமட்டுமின்றி, 4 அணைகளுக்கும் சேர்த்து வினாடிக்கு 25,644 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அதில் ஆறில் ஒரு பங்கு நீரை மட்டுமே திறந்து விட காவிரி மேலாண்மை ஆணையம் ஆணையிட்டுள்ளது. இதனால் கர்நாடக அணைகளின் நீர்மட்டம் குறையாது. மாறாக தினமும் 1.9 டி.எம்.சி வீதம் அணைகளின் நீர் இருப்பு 15 நாள்களில் 28 டி.எம்.சி அதிகரிக்கும். ஆனாலும் தமிழகத்திற்கு குறைந்த அளவு நீரைக் கூட தருவதற்கு கர்நாடக அரசுக்கு மனமில்லை.

காவிரி பிரச்சினையில் தமிழகத்தின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; மேகதாது அணை தடுக்கப்பட வேண்டும்; இவை தொடர்பாக கர்நாடக அரசுடன் எந்த பேச்சுகளையும் தமிழ்நாடு நடத்தக் கூடாது என்பது தான் தமிழக மக்களின் நிலைப்பாடு ஆகும். இதற்கு எதிராக எந்த முடிவையும் முதல்அமைச்சர் விஜய் மேற்கொள்ளக் கூடாது. எனவே, வரும் ஆகஸ்ட் 3ஆம் தேதி கர்நாடகம் செல்லும் முடிவை முதல்அமைச்சர் விஜய் கைவிட வேண்டும்

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மேகதாது அணை விவகாரம்: ராகுல் காந்தியை அன்புமணி வம்புக்கு இழுப்பது நியாயமல்ல மாணிக்கம் தாகூர்



சென்னை, ஆக. 1

மத்திய பா.ஜ.க. அரசில் அன்புமணி, அவருக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கிடைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நேற்று (ஜூலை 30) செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பாமக தலைவர் அன்புமணி, 'ஆகஸ்ட் 1ஆம் தேதி சென்னை வரும், இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மேகதாது அணை கட்டுவது தமிழ்நாட்டிற்கு எதிரானது.

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கர்நாடக அரசு அணை கட்டக்கூடாது என்று சொல்வாரா? அப்படி சொன்னால், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேறத் தயார்" என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு கர்நாடகம் இடையிலான காவிரி நதி நீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது பிரதமர் நரேந்திர மோடியின் கடமையும், பொறுப்பும் ஆகும். இந்த ஆண்டு மழை பொய்த்ததால், காவிரியில் இருந்து, தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தண்ணீர் வரவில்லை.

இந்நிலையில், 'தமிழ்நாட்டிற்கு, தினமும் 3,500 கனஅடி வீதம், அடுத்த 15 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும்" என, கர்நாடக அரசுக்கு, காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இரு மாநில முதல்வர்களுடன் பேச்சு நடத்தி, காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை, செயல்படுத்த வைக்க வேண்டியது பிரதமர் நரேந்திர மோடியின் கடமை. ஆனால் அந்த கடமையிலிருந்து பிரதமர் மோடி தவறுகிறார் என்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் குற்றச்சாட்டு. நாம் அனைவரும் இதைத்தான் கண்டிக்க வேண்டும்.

பாமக தலைவர் அன்புமணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருக்கிறார். பிரதமர் மோடியை எளிதில் அணுகக்கூடிய நிலையிலும் இருக்கிறார். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் இருக்கிறார். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய நீர்வளத்துறை அமைச்சருடன்பேசி, காவிரிபிரச்சினையில்தமிழ்நாட்டிற்கு நியாயம்கிடைக்கவும், காவிரிமேலாண்மைஆணையத்தின் உத்தரவுப்படி, தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்து விடவும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அவரிடம் இருந்து இதைத்தான் தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதற்கு மாறாக, தேவையில்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களை வம்புக்கு இழுப்பது எந்த விதத்திலும் நியாயமல்ல. அவர் பிரதமர் ஆனதும் இந்த கோரிக்கையை அன்புமணி வைக்கலாம்.

காவிரிபிரச்சினையில்தமிழ்நாட்டிற்குநியாயம்கிடைக்க வேண்டும், தமிழகத்திற்கு உரிய தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு. அதில் நாங்கள் எப்போதும் உறுதியாக இருக்கிறோம்.

சட்டமன்றத்தில் தமிழ்நாட்டின் நியாயத்திற்காக காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்கள் எப்போதும் குரல் கொடுப்பார்கள். காவிரிபிரச்சினையில்காங்கிரஸ்அரசியல் செய்ய விரும்பவில்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் நின்று, தமிழ்நாட்டின் குரலை உரக்க வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது.

எனவே, அன்புமணி அவர்கள் இதில் அரசியலை தவிர்த்து, மத்தியபாஜகஅரசில்அவருக்குள்ளசெல்வாக்கை பயன்படுத்தி, தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கிடைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேனியில் 400 ஆண்டுகள் பழமையான் 4 நடுகற்கள் கண்டுபிடிப்பு



தேனி, ஆக. 1

சின்னமனூர் அருகே வேப்பம்பட்டியில் அரிய துப்பாக்கி வீரன் உள்பட 4 நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சின்னமனூர் அருகே வேப்பம்பட்டி பகுதியில், தொல்லியல் ஆய்வாளரும், கடமலைக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியருமான செல்வம், பழமையான நடுகற்கள் தொடர்பாக கள ஆய்வு செய்தார். அப்போது அப்பகுதியில் 4 அரிய நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் செல்வம் கூறியதாவது:

வேப்பம்பட்டியை சேர்ந்த ஆசிரியர் ராமமூர்த்தி அளித்த தகவலின்அடிப்படையில்இந்தகளஆய்வுநடத்தப்பட்டது. வேப்பம்பட்டி சீப்பாலக்கோட்டைச் சாலையில் 500 மீட்டர் இடைவெளியில் 2 வெவ்வேறு இடங்களில் இந்த வரலாற்றுச் சின்னங்கள் அமையப்பெற்றுள்ளன. ஸ்ரீரெங்கன் குளக்கரையில், முதன்மைப் படைத்தலைவன் சிற்பம் உள்ளது. 3 அடி உயரமுள்ள அது கி.பி. 16ம் நூற்றாண்டை சேர்ந்தது. அதில், வீரன் தனது வலது கையில் நீண்ட வாளையும், இடது தோளில் இருந்து தொங்கும் வில்லை இடது கையாலும் ஒருசேரப் பற்றியது போல் இது உள்ளது.

நடராஜ் என்பவருடைய வீட்டின் அருகில் 6 அடி ஆழத்தில் புதைந்திருந்து கண்கெடுக்கப்பட்ட மற்றொரு சிற்பம் 2 அடி உயரம் கொண்டது.

அது 16, 17ம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு வாள் வீரனின் நடுகல். வலது கையில் ஓங்கிய வாளுடனும், இடது தோளில் தொங்கும் வில்லுடனும், மற்றொரு கையை இடுப்பில் ஊன்றியவாறும் போர்க்கோலத்தில் அமைந்துள்ளது. அதே பகுதியில், அரிய திணிப்புதுப்பாக்கி வீரனின் நடுகல் கண்டறியப்பட்டது. அது 17 அல்லது 18ம் நூற்றாண்டை சேர்ந்தது. 2 அடி உயரமுள்ள அந்த நடுகல்லில், வீரன் தனது இடது கையில் நீண்ட திணிப்புத் துப்பாக்கியை தலைகீழாகத் தரையில் ஊன்றிப் பிடித்துள்ளான். வலது கையில் கூரிய உடைவாள் கீழ்நோக்கிப் பாயும் நிலையில் உள்ளது. தமிழகத் தொல்லியலில் துப்பாக்கி ஏந்திய வீரர்களின் நடுகற்கள் மிக அரிது என்பதால், இது ஆயுதப் பரிணாமத்தின் முதன்மைச் சான்றாகக் கருதப்படுகிறது. இந்த இரு நடுகற்களையும் உள்ளூர் மக்கள் 'கோட்டை கருப்பன்', 'கொத்தால முத்து' ஆகிய சிறுதெய்வப் பெயர்களில் வழிபாட்டில் வைத்துள்ளனர். அதேபகுதியில் கிடைமட்ட நடுகற்பலகை ஒன்றும் உள்ளது.

இந்த நடுகற்கள் தென் தமிழகத்தின் 400 ஆண்டுகால ராணுவ மற்றும் சமூக வரலாற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன. 500 மீட்டர் இடைவெளியில் இவை பரவியிருப்பதால், இங்கு ஒரு பிரம்மாண்டமான பாளையக் கோட்டை அரணும் காவற்சாவடியும் இருந்திருக்க வேண்டும். இப்பகுதியில் தொல்லியல் துறை முறையான அகழாய்வு மற்றும் பாதுகாக்கப்பட்ட வரலாற்று மண்டலம் சார்ந்த களஆய்வுகளை மேற்கொண்டால் மேலும் பல வரலாற்று உண்மைகள் வெளிவர வாய்ப்புள்ளன.

# நெல்லையில் போலீசாரை தாக்கி தனியார் சொத்துக்கள் சேதம்: 5 பேர் கைது



திருநெல்வேலி, ஆக. 1

திசையன்விளை பகுதியில் போலீசாரை தாக்கியதோடு, தனியார் சொத்துக்களை சேதப்படுத்திய வழக்கில் போலீசாரின் துரித நடவடிக்கையால் முக்கிய குற்றவாளி உள்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் உட்கோட்டம், திசையன்விளை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 24.7.2026 அன்று போலீசாரை தாக்கியதுடன், சொத்துக்களை சேதப்படுத்திய சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்க, திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. விஷ்வேஷ்பா.சாஸ்திரி உத்தரவிட்டார். இதனையடுத்து வள்ளியூர் உட்கோட்ட போலீசார் தனிப்படை அமைத்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விசாரணையில், முக்கிய குற்றவாளியான இசக்கிராஜா என்பவர் மேலும் 8 பேரை திரட்டி, 3 பைக்குகளில் திசையன்விளை மற்றும் இட்டமொழி பகுதிகளுக்குச் சென்று தொடர் சேதப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டது தெரியவந்தது. அவர்கள் திசையன்விளையில் உள்ள தனியார் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பும் மீட்டரை அரிவாளால் சேதப்படுத்தியதுடன், இட்டமொழி சாலையில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரையும் சேதப்படுத்தினர்.

அதைத் தொடர்ந்து, இட்டமொழி பகுதியில் ரூ.400க்கு எரிபொருள் நிரப்பிய பின்னர், அங்குள்ள பெட்ரோல் பங்கின் பெட்ரோல் நிரப்பும் மீட்டரையும் அரிவாளால் சேதப்படுத்தினர். மேலும், இட்டமொழி சாலையில் ஒரு பயணிகள் ஆட்டோ மற்றும் 2 லோடு ஆட்டோக்களையும் சேதப்படுத்தினர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக திசையன்விளை காவல் நிலையத்தில் பாரதிய நியாய சன்ஹிதா (BNS) பிரிவுகள் மற்றும் தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்துதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட இளஞ்சிறார் ஒருவர் உள்பட 4 பேர் முன்னதாகவே கைது செய்யப்பட்ட நிலையில், அதன் தொடர்ச்சியாக நேற்று தனிப்படை போலீசார் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையால் முக்கிய குற்றவாளியான மகாதேவன்குளம் பகுதியைச் சேர்ந்த இசக்கிராஜா(வயது 20), அதே பகுதியைச் சேர்ந்தவர்களான முத்துராஜா(18), இசக்கிபாண்டி(23), சுயம்புராஜா(22), தாமரைசெல்வி பகுதியைச் சேர்ந்த சுடலைகண்ணு(23) ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய மொத்தம் 10 குற்றவாளிகளில் இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமறைவாக உள்ள மீதமுள்ள ஒருவரை கைது செய்ய போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இவ்வழக்கில் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# மேற்கு தொடர்ச்சி மலை பகுதி பாதுகாக்கப்படுமா? மத்திய அரசு வரைவு அறிக்கை வெளியீடு



கோவை, ஆக. 1

மேற்கு தொடர்ச்சி மலை இயற்கையின் அருள்கொடை. இதனால் தான் தமிழ்நாட்டின் மேற்கு பகுதியான கோவை, நீலகிரி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்கள் மழையை பெறு வதுடன், பசுமையான பகுதியாக விளங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் மருந்துவாழ் மலையில் தொடங்கி குஜராத், மராட்டிய எல்லையில் உள்ள தபதி ஆற்றுக்கு தெற்கே முடிவடைகிறது. இதனால் குஜராத், மராட்டியம், கோவா, கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய பகுதிகள் மேற்கு தொடர்ச்சி மலையால் பசுமை பயனை அடைகின்றன.

1 லட்சத்து 29 ஆயிரம் சதுர கிலோ பரப்பளவு கொண்ட இந்த மலைத் தொடர் தென்இந்தியாவுக்கு பாதுகாப்பு அரணாக விளங்கி வருகிறது. இது, அரபிகடலில் இருந்து வரும் குளிர்ந்த காற்றை தடுத்து தென் மாநிலங்களுக்கு நல்ல மழையை தருகிறது. மேலும் முள்புதர் காடுகள், புல்வெளி பிரதேசங்கள், சோலை காடுகள் உள்ளிட்ட இயற்கை அன்னையின் அனைத்து அதிசயங்களையும் தன்னகத்தே கொண்டு உள்ளது.

இந்த மலையில் நீலகிரி வரையாடு, சிங்கவால் குரங்கு, ஆசிய யானைகள். மலபார்அணில், இருவாச்சி பறவைகள், நீலகிரி பறவை, பலவகையான அரிய மர தவளைகள், பாம்புகள், அரிய பறவைகள் என்று ஏராளமான உயிரினங்கள் வசித்து வருகின்றன.

இந்த மலைத்தொடரில் தற்போது பல்வேறு அச்சுறுத்தல்கள் உள்ளன. அதாவது அருகே உள்ள குவாரிகளில் டைன மேட்டை வெடிக்கச் செய்தல், தொழிற்சாலை கழிவுகளை கலத்தல், சட்ட விரோத சுரங்கங்கள் அமைத்தல், கண்மூடித்தனமான மணல் கொள்ளை, ரிசார்ட் பெருக்கம், காடுகள் அழிப்பு உள்ளிட்ட அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன.

மேற்குத்தொடர்ச்சிமலையை பாதுகாப்பது தொடர்பான சர்ச்சை கடந்த 2011ம் ஆண்டில் இருந்தே நீடிக்கிறது. அப்போது, மறைந்த சூழலியலாளர் மாதவ் காட்கில் தலைமையிலானகுழு, இந்தமலைத்தொடர்முழுவதையும் சூழலியல் ரீதியாக உணர்திறன் மிக்க பகுதியாக கருதி, அதற்கு பல் வேறு நிலைகளிலான பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

இந்தநிலையில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சூழலி யல் ரீதியாக உணர்திறன் மிக்க பகுதியை (எகோ ஸோன்) உருவாக்குவதற்கான வரைவு அறிவிப்பை, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மீண்டும் தற்போது வெளியிட்டு உள்ளது. பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்துக்குபின்இந்தவரைவுஅறிக்கைஇறுதிசெய்யப்படும்.

இதையடுத்து அந்த பகுதியில் சுரங்கப் பணிகள், கல்குவாரிகள், மணல் அள்ளுதல், புதிய அனல் மின் நிலையங்கள், குறிப்பிட்ட சில தொழிற்சாலைகள் மற்றும் பெரிய கட்டுமானத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்பட உள்ளது. அதேவேளையில் நீர்மின் உற்பத்தி போன்ற செயல்பாடுகள் முறைப்படுத்தப்படும் என்றும் இந்த அறிவிப்பு வலியுறுத்துகிறது.

சூழலியல் ரீதியாக உணர்திறன் மிக்க பகுதியில் சேர்க்கப்பட வேண்டிய 'கிராமங்களின் சரியான பெயர்கள் மற்றும் பரப்ப ளவு மற்றும் மாநில அரசுகள் சமர்ப்பித்த பிற பரிந்துரைகள் ஆகியவை குறித்து நிபுணர் குழு தொடர்ந்து ஆய்வு செய்து வருவதாக இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த புதிய அறிவிப்பானது, ஆறு மாநிலங்களில் பரவியுள்ள சூழலியல் உணர்திறன் மிக்க பகுதியின் பரப்பளவை 56,825.7 சதுர கிலோ மீட்டராகவே தக்கவைத்து உள்ளது. ஆறு மாநிலங்களில் பரவியுள்ள 56,825.7 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான முன்மொழியப்பட்ட சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை இந்த அறிவிப்பு அப்படியே தக்கவைத்துள்ளது. இதில் மராட்டியம் மற்றும் கர்நாடகா மாநிலங்கள் இணைந்து 20,668 சதுர கிலோமீட்டர் பரப்பளவையும், கேரளா 9,993.7 சதுர கி.மீ, தமிழ்நாடு 6,914 சதுர கி.மீ, கோவா 1,461 சதுர கி.மீ மற்றும் குஜராத் 449 சதுர கி.மீ பரப்பளவையும் கொண்டுள்ளன.

கேரளாவின்வயநாடுமாவட்டத்தில்உள்ளமானந்தவாடி, சுல்தான்பத்தேரி மற்றும் வைதிரி ஆகிய வட்டங்களைச் சேர்ந்த 13 கிராமங்கள் முந்தைய வரைவில் இடம்பெற்றிருந்தன. அவை தற்போதைய அறிவிப்பிலும் தொடர்ந்து சேர்க்கப்பட்டு உள்ளன. மத்திய அரசின் வரைவு அறிக்கை குறித்து கோவை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறும்போது, மேற்கு தொடர்ச்சி மலைப்பகு தியை காக்க இந்த அறிக்கையின் மூலம் 6 மாநில அரசு களும் கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லாவிட் டால் நாளைய தலைமுறைகள் இயற்கை சூழலை இழக்கும் அபாயம் ஏற்படும். எனவே மேற்கு தொடர்ச்சி மலை பகுதி பாதுகாக்கப்பட வேண்டிய மிகவும் அவசியம் என்றனர்.

# தென்அமெரிக்காவில் கட்டப்படும் சமயபுரம் மாரியம்மன் கோவில்



சென்னை, ஆக. 1

தென்அமெரிக்காவில்ராஜகோபுரம், தெப்பக்குளத்துடன் சமயபுரம் மாரியம்மன் கோவில் கட்டப்பட இருக்கிறது.

சக்திஸ்தலங்களில்பிரசித்திபெற்றசமயபுரம்மாரியம்மன் கோவிலுக்கு தினமும் தமிழகம் மட்டுமல்லாது வெளிமாநிலம், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து அம்மனை தரிசனம் செய்வது வழக்கம்.

அந்தவகையில், அமெரிக்க நாட்டை சேர்ந்த ரூபினா அரோன் என்ற இளம்பெண் பக்தர் சமயபுரத்தில் நடக்கும் விழாக்களில் கலந்து கொண்டு தீ மிதிப்பது, அக்கினி சட்டி ஏந்தி தமிழ் பக்தர்கள் மரபில் சாமி தரிசனம் செய்து வருகிறார். இந்த நிலையில், தென் அமெரிக்காவில் உள்ள கயானாவில் சமயபுரம் மாரியம்மன் கோவில் போன்று ஒரு கோவில் கட்ட இருக்கிறார். இதற்காக சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை உயர் அதிகாரிகளை சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றார்.

இதுகுறித்துசென்னையில்ரூபினாஅரோன்நிருபர்களிடம் கூறும்போது, "தென்அமெரிக்காவிலுள்ள கயானாவில் வசித்தாலும் சமயபுரம் மாரியம்மன் தான் எங்களுக்குக் காவல் தெய்வம். ஆண்டுதோறும் ஆடிமாதம் சித்திரை தேர் திருவிழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்வேன். சென்ற ஆண்டு அம்மனிடம் வைத்த ஒரு வேண்டுதல் நிறைவேறியது. தொடர்ந்து அங்க பிரதிஷ்டை செய்து நேர்த்திக்கடனை அருளும்படி வேண்டிக் கொண்டேன்.

அமெரிக்கா கயானாவில் 5% ஏக்கர் நிலப்பரப்பில் ராஜகோபு ரத்துடன் சமயபுரம் மாரியம்மன் கோவில் கட்ட முடிவு செய்துள்ளோம். சமயபுரம் மாரியம்மன், விநாயகர், முருகன், சிவன், நவகிரகங்கள், தெப்பக்குளம், யாகசாலை, தீமிதி மைதானம், கலாசார மையம் ஆகியவற்றை அமைக்க இருக்கிறோம். இதற்கு உலகம் முழுவதும் உள்ள பெரும்பாலான நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கத்தினர் நிதி உதவி வழங்குகின்றனர்.

# மக்கள் பணம் எங்கே? பிரதமர் மோடியிடம் மாணிக்கம் தாகூர் கேள்வி



சென்னை, ஆக. 1

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

மக்கள் பணம் எங்கே பிரதமர் நரேந்திர மோடியே?

ZERO ACCOUNTABILITY

பொதுமக்களின் வியர்வைச் சிந்திய பணமும், அரசு ஊழியர்களின் சம்பளப் பங்களிப்பும் இணைந்து உருவாக்கப்பட்டது தான் இந்த PMCARES நிதி!

2022, 23 ஆம் நிதியாண்டில் மட்டும் ரூ.909.64 கோடி நன்கொடை உட்பட ரூ.6,723.07 கோடி வரவு வந்த நிலையில், அதில் வெறும் ரூ.439.38 கோடி மட்டுமே செலவழிக்கப்பட்டு, மீதம்ரூ.6,283.68கோடிகையிருப்பில் உள்ளது.

வெளியிடப்படாதது ஏன்?

1. 202223க்கு பின் ஆடிட் ஸ் டே ட் மெ ண் ட் ஸ் வெளியிடப்படாதது ஏன்?

2. அமைச்சர்கள் இருக்கும் அமைப்பிற்கு ஆர்.டி.ஐ. (RTI) பொருந்தாது எனக் கூறித் தப்பிப்பது ஏன்?

மத்திய அமைச்சர்களே இதன் அ ற ங் கா வ ல ர் க ளா க பொறுப்பில் இருக்கும் போது, சட்டப்படி பொது ஊழியர்களான அவர்கள் மக்களுக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்! எனவே, PM CARES நிதி நிச்சயம் ஆர்.டி.ஐ. வரம்பிற்குள் (Ambit of RTI Act) தான் வருகிறது.

மக்கள் பணத்தின் கணக்கை மறைக்காமல் உடனடியாக வெளியிட வேண்டும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
01.08.2026

# ஆடி அமாவாசை காரையாறு சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு கட்டுப்பாடு




தென்காசி, ஆக 1

பாபநாசம் காரையாறு சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழாவுக்கு அரசு பஸ்களில் மட்டுமே சென்று வர பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படும். வனப்பகுதியில் கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் ஆனந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாபநாசம் காரையாறு சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழாவிற்காக பக்தர்கள் நலன் கருதி பல்வேறு சிறப்பான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது. பக்தர்கள் வனத்துறைசட்டதிட்டங்களுக்குஉட்பட்டு, 4 மாவட்ட மக்களின் நீர் ஆதாரமாக விளங்கக்கூடிய தாமிரபரணி ஆறு மற்றும் அது உருவாகும் வனத்தில் இயற்கை சூழலை பாதுகாப்பதன் அவசியத்தையும் உணர்ந்து அனைத்து துறை அலுவலர்களுக்கும் நன்முறையில் ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கூட்ட நெரிசலால் ஏற்படும் பாதிப்பை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள் முந்தைய ஆண்டுகள் போலவே இந்த ஆண்டும் பாரம்பரிய முறைப்படி 6 நாட்கள் வரை வழிபாடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பொதுமக்கள் பொருட்களை எடுத்து செல்ல ஆகஸ்டு 9ந் தேதி காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை மட்டும் பாபநாசம் சோதனைச்சாவடியில் இருந்து வாகனங்கள் அனுமதிக்கப்படும். ஆகஸ்டு 7 மற்றும் 8 ஆகிய நாட்கள் முழுவதும் கோவில் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளும் காரணத்தினால் அரசு பஸ், தனியார் உள்ளிட்ட எந்த வாகனங்களும் பாபநாசம் சோதனைச்சாவடியில் அனுமதிக்கப்படமாட்டாது.

ஆகஸ்டு 10ந்தேதி முதல் 12ந்தேதி வரை பக்தர்கள் பாரம்பரிய சடங்குகள் மேற்கொள்ள முந்தைய ஆண்டுகள் போலவே கோவிலில் தங்க அனுமதிக்கப்படுகிறது. பக்தர்கள் அகஸ்தியர்பட்டி தற்காலிக பஸ்நிலையத்தில் இருந்து அரசு பஸ்களில் மட்டுமே கோவிலுக்கு சென்று வர அனுமதிக்கப்படுவார்கள். தனியார் வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

ஆகஸ்டு 13ந் தேதி காலை குறைவான எண்ணிக்கையில் மட்டுமே பஸ்கள் இயக்கப்படும். பக்தர்கள் பொருட்களை கீழே கொண்டு வருவதற்காக மட்டும் தனியார் வாகனங்களுக்கு ஆகஸ்டு 14ந் தேதி காலை 6 மணி முதல் மாலை 3 மணிவரையிலும் பாபநாசம் கோவில் பார்க்கிங் பகுதியில் பாஸ் வழங்கப்பட்டு அனுமதிக்கப்படும். கீழே இறங்கும் பக்தர்களுக்காக அரசு பஸ்கள் ஏற்பாடு செய்யப்படும். ஆகஸ்டு 15, 16ந் தேதிகளில் தூய்மை பணிகள் மற்றும் கோவில் உழவார பணி காரணமாக பொதுமக்கள் பாபநாசம் சோதனை சாவடியை கடந்து செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்டு 17ந் தேதி முதல் வழக்கமான நடைமுறைப்படி கோவிலுக்கு சென்று வரலாம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நீட் தேர்வில் சாதனை படைத்த திருப்பூர் அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள்: நயினார் நாகேந்திரன் பாராட்டு



திருப்பூர், ஆக. 1

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது: அரிய சாதனைகள் எப்போதும் எளிய பின்னணியில் இருந்தே தொடங்குகின்றன என்பதை திருப்பூர் மாவட்டம், இடுவம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 10 மாணவமாணவிகள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளனர். நடப்பு நீட் மருத்துவ நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, தங்களது மருத்துவக் கனவை நனவாக்கியுள்ள இந்த இளம் சாதனையாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரண குடும்பப் பின்னணியில் இருந்து வந்து, "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இலக்கணமாகத் திகழும் இம்மாணவர்களில் 9 பேர், முதல் முயற்சியில் ஏற்பட்ட சறுக்கல்களால் சோர்ந்து போகாமல், விடாமுயற்சியுடன் மறுமுறைத் தேர்வு (Repeaters) எழுதி சாதித்துள்ளனர். இம்மாணவர்களோடு சேர்ந்து அவர்களின் மருத்துவக் கனவுக்கு தோள் கொடுத்த அன்புப் பெற்றோர்களுக்கும், அர்ப்பணிப்புடன் வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணி ஒருவரது கனவுகளுக்குத் தடையல்ல என்பதை இம்மாணவர்களின் வெற்றி நிரூபித்துள்ளது. தங்களது உழைப்பால் உயர்ந்து, எதிர்காலத்தில் ஏழை, எளிய மக்களுக்குச் சேவை செய்யும் சிறந்த மருத்துவர்களாக உருவாக இவர்களை வாழ்த்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (01.08.2026)

**மேஷம்** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மூத்த அதிகாரிகளின் ஆதரவும் வழிகாட்டுதலும் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**ரிஷபம்** தொழிலில் இருந்த சிக்கல்கள் விலகும். வங்கி கடன் முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களை அளவுக்கு அதிகமாக நம்புவதைத் தவிர்க்கவும்

**மிதுனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.வாகனப்பயணங்களிலும் பணப் பரிவர்த்தனைகளிலும் அதிக கவனம் தேவை.

**கடகம்** சந்திராஷ்டம நிறைவு என்பதால் பிற்பகலுக்கு மேல் நிம்மதி கூடும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கூட்டுத் தொழில் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்

**சிம்மம்** தொழில் சார்ந்த விஷயங்களில் நிதானம் தேவை. அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல கவனம் மற்றும் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி** ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**துலாம்** புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு இடையே புரிந்துணர்வு கூடும். பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.


**தனுசு** பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சுகள் சுமுகமாக முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையளிக்கும்.

**மகரம்** சந்திரனின் சாதகமான நகர்வால் மன அமைதி கூடும். எதிர்பார்த்த உதவிகளும் பரிசுகளும் கிடைக்கும். ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்** தேவையற்ற விரயச் செலவுகள் வரக்கூடும் என்பதால் சிக்கனம் தேவை. வெளிநாடு அல்லது வெளியூர் தொடர்பான செய்திகள் சாதகமாக வரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

# பாறைகளாக காட்சியளிக்கும் ஒகேனக்கல் காவிரி ஆறு குடிநீர் தட்டுப்பாடு அபாயம்



தர்மபுரி, ஆக. 1

கர்நாடக மாநிலம் குடகுமலையில் உற்பத்தியாகும் காவிரி ஆறு தமிழக எல்லையான தர்மபுரி மாவட்டம் பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல்லுக்கு வருகிறது. மேலும் கர்நாடக மாநில அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் போது ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு வெள்ளமாக ஓடும்.

அப்போது இங்குள்ள மெயின் அருவி, சினி அருவி, ஐந்தருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துகொட்டும்.ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணெய் மசாஜ் செய்து கொண்டு அருவிகள், காவிரி கரையோர பகுதிகளில் குளித்து மகிழ்வர். மேலும் குடும்பத்தினருடன் உற்சாகமாக பரிசலில் சென்று காவிரியின் அழகை கண்டு ரசிப்பர்.

இதனிடையே காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை தொடங் காததால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அடியோடு குறைந்து விட்டது. இத்தகைய சூழ்நிலையில் கர்நாடக அணையில் இருந்து நீர் திறப்பு முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் கர்நாடக அரசு காவிரி ஆற்றில் தண்ணீரை திறந்து விட மறுக்கிறது. இதனால் நீர்வரத்து முற்றிலுமாக சரிந்துள்ளது.

குறிப்பாக ஒகேனக்கல் காவிரி ஆற்றுப்பகுதி முழுவதும் கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்தில் நீர் நிரம்பி இருந்த நிலைமறைந்துதற்போதுவெறும்பாறைகளாக மட்டுமே காட்சியளிக்கிறது. ஐந்தருவி, ஐவர்பாணி உள்ளிட்ட பகுதிகள் முழுமையாக வறண்டு கிடக்கின்றன. கடந்த ஆண்டு ஜூலை மாதம் 28ந் தேதி காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் கனஅடியாக இருந்தது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் தற்போது நீர்வரத்து குறைந்து பாறைகளாக காட்சியளிக்கிறது. ஆங்காங்கே தண்ணீர் தேங்கி குட்டை போல காட்சியளிக்கிறது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதுமான மழை இல்லாததாலும், கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும்தண்ணீரின்அளவு முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதாலும் காவிரி ஆற்றில் நீர்வரத்துகுறைந்துள்ளது. இதன்காரணமாக தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திற்கான தண்ணீர் எடுக்க தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. நீர்வரத்து குறைவால் ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மேலும் சுற்றுலாவை நம்பி உள்ள பரிசல் ஓட்டிகள், உணவு சமைப்பவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது.

# சேலத்தில் 17 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் கைது




சேலம், ஆக. 1

சேலம் மாவட்டத்தில் 17 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

சேலம்மாவட்டம்வாழப்பாடிபகுதியைச் சேர்ந்தவர் 17 வயது சிறுமி. அந்த சிறுமிக்கு ஹரிகரன் ( 28) என்ற வாலிபர் பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்துள்ளார். சிறுமிக்கு பாலியல் ரீதியான அத்துமீறல் மற்றும் தொல்லை கொடுத்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில் குற்றம் உறுதி செய்யப்பட்டதையடுத்து, ஹரிகரன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார் அவரை கைது செய்தனர்.

# விஜய் ரசிகர்கள் மீது இத்தனை வெறுப்பு ஏன்? நடிகை மீஷா கோஷல் ஆதங்கம்





நடிகரும, தமிழக முதலமைச்சருமான விஜய்யின் ஆதரவாளர்களை விமர்சித்து சமூக வலைதளங்களில் பதிவுகள் வெளியாகி வரும் நிலையில், அதற்கு நடிகை மீஷா கோஷல் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். தங்களுக்கு பிடித்த தலைவரின் திரைப்படத்தை பார்ப்பதும், அவரை ஆதரிப்பதும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட உரிமை என்றும், 'ஜனநாயகன்' திரைப்பட வெளியீட்டை மாணவர் போராட்டத்துடன் தொடர்புபடுத்துவது அர்த்தமற்றது என்றும் அவர் தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது சமூக வலைதள பதிவில் மீஷா கோஷல் கூறியதாவது: "தங்களுக்கு பிடித்த ஹீரோவின் படத்தை பார்ப்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பமும், உரிமையும் ஆகும். தளபதி விஜயின் ரசிகர்கள் என்பதற்காக எங்கள் மீது ஏன் இத்தனை வெறுப்பு? நாங்கள் அப்படி என்ன தவறு செய்தோம்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அவர், "வேறு எந்த ஹீரோவின் ரசிகர்களாக இருந்தாலும் இதுபோல் பேசுவீர்களா? நான் விஜய் ரசிகை என்பதற்காக என்னை சமூக வலைதளங்களில் 'Unfollow' செய்ய விரும்பினால் தாராளமாக செய்துகொள்ளுங்கள், எங்களுக்கு பிடித்த நடிகரை கொண்டாடுவதும், அவரது படத்தை பார்ப்பதும் எங்கள் விருப்பம். அதற்காக எங்களை குற்றவாளிகளைப் போல சித்தரிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. 'ஜனநாயகன்' திரைப்பட வெளியீட்டையும், மாணவர் போராட்டத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவது முற்றிலும் அர்த்தமற்றது," என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நடிகை மீஷா கோஷலின் இந்த பதிவு சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. அவரது கருத்துக்கு சிலர் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில், சிலர் மாறுபட்ட கருத்துகளையும் பதிவு செய்து வருகின்றனர்.

# 11 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் திரைக்கு வருகிறது 'த்ரிஷா இல்லனா நயன்தாரா'




2015ம் ஆண்டு வெளியான 'த்ரிஷா இல்லனா நயன்தாரா' திரைப்படம் நகைச்சுவை மற்றும் திகில் கலந்த கதைக்களத்தில் உருவாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் எழுதி இயக்கிய இந்தப் படத்தில் ஜி.வி. பிரகாஷ் குமார் கதாநாயகனாக நடித்திருந்தார். ஆனந்தி மற்றும் மனிஷா யாதவ் கதாநாயகிகளாக நடித்திருந்தனர். மேலும் சிம்ரன், வி.டி.வி. கணேஷ், ஆர்யா, ப்ரியா ஆனந்த், யூகி சேது உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் இடம்பெற்றிருந்தனர்.

முழுக்க முழுக்க இரட்டை அர்த்த வசனங்களை மையமாகக் கொண்டு இளைஞர்களை கவரும் வகையில் உருவான இந்த திரைப்படம், வெளியானபோது வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் வெற்றி பெற்றது. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் இப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்த நிலையில், 'த்ரிஷா இல்லனா நயன்தாரா' திரைப்படத்தை 11 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் திரையரங்குகளில் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது. மீண்டும் வெளியிடப்படும் தேதி விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பெரிய திரையில் வெளியாக உள்ள 'த்ரிஷா இல்லனா நயன்தாரா' திரைப்படத்தை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# "எனக்கு நடிக்க தெரியாது" 'பிளாஸ்ட்' பட நடிகை பிரீத்தி முகுந்தன் பேச்சு

'ஸ்டார்' திரைப்படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த நடிகை பிரீத்தி முகுந்தன், தற்போது தென்னிந்திய சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகைகளில் ஒருவராக திகழ்கிறார். முதல் படத்தின் வெற்றிக்குப் பிறகு 'நாக்ஜில்லா', 'கண்ணப்பா', 'சர்வம் மாயா' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள அவர், தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, மலையாள மொழிப் படங்களிலும் தொடர்ந்து பிஸியாக நடித்து வருகிறார்.

பிரீத்தி முகுந்தன் நடிப்பில் கடந்த மாதம் வெளியான 'பிளாஸ்ட்' திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. ஆக்ஷன் கிங் அர்ஜுன், அபிராமி உள்ளிட்டோருடன் இணைந்து நடித்திருந்த அவர், குறிப்பாக படத்தின் அதிரடி சண்டைக் காட்சிகளில் வெளிப்படுத்திய நடிப்புக்காக பாராட்டுகளைப் பெற்றார். இந்த வெற்றியைத் தொடர்ந்து அவருக்கு மேலும் பல ஆக்ஷன் பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன.

இந்த நிலையில், மாடலிங் துறையில் இருந்து திரைப்பட உலகிற்கு வந்த நடிகை பிரீத்தி முகுந்தன், தனது திரைப்பயணத்தின் தொடக்கத்தில் எதிர்கொண்ட அனுபவங்களை சமீபத்திய பேட்டியில் பகிர்ந்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "நான் மாடலிங் செய்து கொண்டிருந்தபோது, எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. அப்போது எனக்கு வயது 18. ஆனால், என்மீது எனக்கே நம்பிக்கை இல்லை. 'என்னால் ஆடிஷன் செய்ய முடியாது, என்னை நானே அவமானப்படுத்திக் கொள்வேன், எனக்கு நடிக்கத் தெரியாது' என்று பல்வேறு பயங்களுடன் இருந்தேன்" என்றார். மேலும், "அந்த நேரத்தில் என் பெற்றோர் நேரடியாக கல்லூரி விடுதிக்கு காரில் வந்து என்னிடம் பேசினர். 'ஏன் முயற்சி செய்யக் கூடாது? பரவாயில்லை... இதுதான் தொடக்கம். நீ முயற்சி செய்து பார்க்க வேண்டும்' என்று அவர்கள் என்னை ஊக்கப்படுத்தி ஆடிஷனுக்கு அனுப்பினர். அவர்களின் அந்த வார்த்தைகள்தான் எனக்கு முதல் அடியை எடுத்து வைக்கத் தைரியம் தந்தது. அந்த முதல் ஆடிஷனில் தனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், அந்த அனுபவம்தான் சினிமா மீது தனக்கு ஒரு உண்மையான காதலையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# "அங்கு தோனி இல்லை"... ஸ்டீபன் பிளெமிங் இங்கிலாந்து பயிற்சியாளரானநிலையில் மைக்கேல் வாகன் பரபரப்பு பேச்சு




இங்கிலாந்து டெஸ்ட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக ஸ்டீபன் பிளெமிங் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் சில கருத்தை தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் முன்னாள் கேப்டனான ஸ்டீபன் பிளெமிங், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயல்பட்டு 5 ஐபிஎல் கோப்பைகளை வென்றுள்ளார். ஐபிஎல் 2026 தொடருக்குப் பிறகு அந்தப் பொறுப்பில் இருந்து விலகிய அவர், தற்போது இங்கிலாந்து டெஸ்ட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிளெமிங்கின் நியமனம் குறித்து பேசிய மைக்கேல் வாகன், "பிளெமிங் மிகவும் மதிப்புமிக்க பயிற்சியாளர். ஐபிஎல் போட்டிகளில் அவருடைய பணியை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், இங்கிலாந்து கிரிக்கெட்டில் அவர் சந்திக்கும் மிகப்பெரிய சவால் என்னவென்றால், அவருக்கு எம்.எஸ். தோனி போன்ற கேப்டன் இங்கு இல்லை. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை களத்தில் தோனிதான் சிறப்பாக வழிநடத்தினார். மேலும், பிளெமிங்குடன் எரிக் சைமன்ஸ் போன்ற திறமையான உதவிப் பயிற்சியாளர்களும் இருந்தனர்" என்று கூறினார்.

"சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெறும் வேகப்பந்துவீச்சை மட்டும் நம்பாமல், ஸ்விங், துல்லியம் போன்ற பந்துவீச்சு நுட்பங்களையே அதிகமாக நம்பி கட்டமைக்கப்பட்டது. அதே அணுகுமுறை மீண்டும் இங்கிலாந்து அணியிலும் வருமா என்பதை பார்க்க ஆவலாக இருக்கிறேன்" என்றார். 53 வயதான ஸ்டீபன் பிளெமிங், பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு பிறகு இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளராக பொறுப்பேற்க உள்ளார். அதுவரை மார்கஸ் டிரெஸ்கோதிக் இடைக்கால தலைமை பயிற்சியாளராக செயல்படுவார்.

# ரஹானேவின் ஓய்வு அறிவிப்புக்கு ரோகித் கொடுத்த ரியாக்சன்... சமூக வலைதளங்களில் வைரலாகும் பதிவு



சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ரஹானே ஓய்வு பெறுவதாக அறிவித்ததற்கு ரோகித் சர்மா கொடுத்த ரியாக்சன் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

ரஹானேவின்ஓய்வுஅறிவிப்பையடுத்து ரோகித்சர்மாதனது சமூகவலைதளபதிவில், "நாம் பல ஆண்டுகளாக ஒரே டிரெஸ்ஸிங் ரூமை பகிர்ந்து வந்துள்ளோம். ரஹானே சாதித்த அனைத்திற்கும் பின்னால் எவ்வளவு கடின உழைப்பு இருக்கிறது என்பது எனக்கு தெரியும். உங்களின் அற்புதமான கிரிக்கெட் வாழ்க்கைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்" என்று தெரிவித்துள்ளார்.

நேற்று தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் உணர்ச்சிபூர்வமான வீடியோ ஒன்றை வெளியிட்ட ரஹானே, சர்வதேச கிரிக்கெட் மற்றும் அனைத்து வடிவ போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதன் மூலம் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக நீடித்த அவரது கிரிக்கெட் பயணம் முடிவுக்கு வந்துள்ளது.

டெஸ்ட்: 85 போட்டிகள், 5,077 ரன்கள், 12 சதங்கள், 26 அரைசதங்கள் (சராசரி: 38.46)

ஒருநாள் (ODI): 90 போட்டிகள், 2,962 ரன்கள், 3 சதங்கள், 24 அரைசதங்கள் (சராசரி: 35.26) டி20 (T20I): 20 போட்டிகள், 375 ரன்கள், 1 அரைசதம் (சராசரி: 20.83)

# படைத்த இந்தியா உலக ஜூனியர் ஸ்குவாஷில் தொடர்ந்து 2வது முறையாக வெண்கலம் வென்று அசத்தல்

உலக ஜூனியர் ஸ்குவாஷ் அணி சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய ஆண்கள் அணி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக வெண்கலப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளது.

உலக ஜூனியர் ஸ்குவாஷ் அணி சாம்பியன்ஷிப் தொடரின் அரையிறுதியில் அமெரிக்க அணியை எதிர்கொண்ட இந்தியா, 02 என்ற கணக்கில் தோல்வியை தழுவியது. இதன் மூலம் இறுதிப்போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்த இந்தியா, வெண்கல பதக்கத்தை வென்றது.

உலக ஜூனியர் ஸ்குவாஷ் வரலாற்றில், இந்திய ஆண்கள் அணி தொடர்ச்சியாக இரண்டு தொடர்களில் பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

பெண்கள் பிரிவில், இந்திய அணி காலிறுதியில் அமெரிக்காவிடம் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது. இதனால் பெண்கள் அணியால் பதக்கம் வெல்ல முடியவில்லை.

இந்ததொடரின்ஆடவர்இறுதிப்போட்டியில்அமெரிக்காமற்றும்நடப்புசாம்பியனானஎகிப்துஅணிகள்மோதுகின்றன. அரையிறுதியில் பிரான்ஸ் அணியை வீழ்த்திய எகிப்து, மீண்டும் சாம்பியன் பட்டத்தை தக்கவைக்க களமிறங்குகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.